DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.86 /2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 18 | நாள் | : | 24.10.2025 |
| பெயர் | : | திருமலைச்சாமி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 24th day of October 2025.

எதிரி ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை

நான் காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று வாசுதேவநல்லூரில் வசித்து வருகிறேன். நான் இதற்கு முன்பு வாசுதேவநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 21.10.2017 மதியம் 12.45 மணியளவில் நிலைய பொறுப்பிலிருந்தபோது வாசுதேவநல்லூர் முருகன் மனைவி மாரியம்மாள் என்பவர் அவரது தம்பி கணேசன் என்பவருடன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்னர் புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய கு.எண்.247/2017 வழக்கின் பிரிவு 294(பி), 324, 307, 506(2) இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அசல் புகார் வாக்குமூலத்தையும், முதல்

தகவலறிக்கையையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். விசாரணை நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.13 ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்குமிடையே சுமராக 2 அல்லது 3 கி.மீ. இருக்கும். சம்பவ இடம் சாலையின் முகப்பில் உள்ளது. சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்குமிடையே சுமராக 1 கி.மீ. மட்டுமே இருக்கும் என்றால் இருக்கலாம். நடந்து வந்தால் 15 முதல் 30 நிமிடங்களுக்குள் வந்துவிடலாம். 12.45 மணிக்கு நிலையம் வந்தார்கள். நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் நிலைய பொறுப்பிலிருந்ததாக கூறுவதும் புகார்தாரர் நிலையம் ஆஜரானதாக கூறுவதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் புகார் வாக்குமூலத்தை பதிவு செய்ததாக கூறுவதும் முதல் தகவலறிக்கை பதிவு செய்ததாக கூறுவதும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாக கூறுவதும் உண்மையல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.24 17:15:21 +0530